# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.44/2025 | Date | : 06.11.2025 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : திரு. கோபால் | Calling | : |
| Father / Husband Name | : வெங்கடாசலம் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 06.11.2025.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் . )

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1. நான் சேலம் மாவட்டம், சங்ககிரி தாலுக்கா, தப்பக்குட்டை கிராமம், முத்துக்குட்டியூர், காட்டுவளவு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தறி வேலை செய்து வருகிறேன். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பாக இரவு 11.00 மணிக்கு எனது தம்பி சிவராஜ் வீட்டிற்கு வருவதற்காக சின்ன மாரியம்மன் கோவில் அன்னை ஆயில் மில் அருகே ரோட்டின் இடது ஓரமாக நடந்து கொண்டிருந்தபோது, Pulsar இருசக்கர வாகனம் மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், சம்பவ இடத்திலேயே இறந்து விட்டதாக தெரிந்தவர்கள் எனக்கு தகவல் தெரிவித்தார். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது, எனது தம்பிக்கு தலையில் காயம் ஏற்பட்டும் மற்றும் பல இடங்களில் காயம் ஏற்பட்டும் இறந்து கிடந்தார். இது சம்மந்தமாக மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில்புகார் கொடுத்தேன். புகாரில் உள்ள

கைரேகை என்னுடையதுதான். **(மேற்சொன்ன புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** சேலம், அரசு மருத்துவமனையில் எனது தம்பிக்கு பிரேத பரிசோதனை செய்தார்கள். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். யார் விபத்தை ஏற்படுத்தினார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது. வாகன விபத்து நஷ்ட ஈடு கேட்டு நான் மனு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். விபத்து என் தம்பியின் கவனக்குறைவால் மற்றும் அஜாக்கிரதையால் சாலையை கடக்கும்போது ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு எழுத படிக்க தெரியாது. புகார் மனுவை நான் எழுதவில்லை, போலிசார் எழுதி கொடுத்தார்கள் நான் அதை படித்துப் பார்க்கவில்லை. மோட்டார் வாகன நஷ்ட ஈடு பெற வேண்டும் என்ற காரணத்தினால் எதிரி மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்துக்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை.

Witness – Sd/- Gopal

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/- D. Sivakumar,
Judicial Magistrate No.II,
Sankari.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.44/2025 | Date | : 06.11.2025 |
| Deposition of Witness for | : **அ.சா.2** | Taluk | : |
| Name | : **திரு. பழனிசாமி** | Calling | : |
| Father / Husband Name | : **ஏழுமலை** | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 06.11.2025.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர். )

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1. நான் சேலம் மாவட்டம், சங்ககிரி தாலுக்கா, நடுவனேரி, கருங்கல்காட்டு வளவில் குடியிருந்து தறி வேலை செய்து வருகிறேன். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பாக காலை 07.00 மணியளவில் முத்துக்குட்டியூர், அன்னை ஆயில் மில் அருகே போலிசார் முதல் நாள் இரவு நடந்த விபத்து தொடர்பாக வரைபடம் வரைந்தார்கள். நானும் எங்கள் ஊரைச் சேர்ந்த செல்வன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். ( **மேற்சொன்ன பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

அ.சா.1 மற்றும் இறந்துபோன திரு.சிவராஜ் அவர்களும் எனக்கு மாமா முறை ஆவார்கள். நான் வழக்கு சம்மந்தமாக காவல் நிலையம் சென்றேன். நான் காவல் நிலையத்தில் வைத்துதான் மேற்சொன்ன ஆவணத்தை கையொப்பம் செய்தேன் என்று சொன்னால் சரிதான். அந்த ஆவணம் முன்பாக தயார் வைக்கப்பட்டிருந்ததா என்று சொன்னால் சரிதான். திரு. செல்வன் அவர்களும் காவல் நிலையத்தில் வைத்து மேற்சொன்ன பார்வை மகஜரில் கையொப்பம் செய்தார். காவல் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதனால் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம். அ.சா.1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை.

Witness- Sd/- Palanisamy

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/- D. Sivakumar,
Judicial Magistrate No.II,
Sankari.